உ

செந்திலாண்டவன் திருவடி துணை

# பாலவிநோதினி

## அல்லது

# குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை

தொகுதி 7 | செப்டம்பர் 1925 | பகுதி 9

## தெய்வ வணக்கம்.

பரவுமிசை வரிவண்டு விரைகமழு மதுவுண்டு
    டயிலுமென் மலர் கொண்டுநின்
பங்கய பதங்களில் அணிந்தினிய செந்தமிழ்
    பகர்ந்துனை வலம்புரிந்து
சரவண பவாபரா பரவடிவ மேசரா
    சரமான கருணாகரா
சதுர்வேத பூரணா முதுஞான காரணா
    சமரகே தனவாரணா
அரகரகுகாநீதி வாதன்மருகா சோதி
    யாதியே யெனவோதியே
அநுதினமு மெனதுதிரு மனசையொரு வழிநிறுவி
    அடியேன் துதிப்பதற்குத்
தெருளதுகொடுத்துவெம் பருவரல் கெடுத்துளந்
    தேற்றிவினை மாற்றியாள்வாய்
செயமிகுத் துலவுதிரு மயில்வயப் பரியில்வரு
    சிவகிரிக் குமர குருவே.

(மாம்பழக் கவிச்சிங்க நாவலர்.)

# ஹிதோபதேசம்.

1. பெரியவர் என்பர் யாவர்:-தாய், தந்தை, தமை யன் இவர்கள் உரிமையால் பெரியவர்கள். வேந்தர் முதலானோர் செல்வத்தால் பெரியவர்கள். குரு கல்வி கேள்விகளிலும் அறிவிலும் ஒழுக்கங்களிலும் பெரிய வர். இவர்களே யல்லாமல் எத்தகைய பெரிய காரியங் களையும் எளிதில் முடிக்க வல்லவர்களுமுண்டு. அவர் களும் பெரியாரில் சேர்க்கப்படுவர்.

இத்தகைய பெரியோர்களுக்கு அடங்கி இவர்கள் விதிக்கும் விதிகளுக்கு உட்பட்டு நடப்பதே, ஒருவன் தன் வாழ்க்கையை இன்பமாய் நடத்துவதற்குப் பெருந் துணையாகும்.

2. பெரியாருடைய நட்புநாளுக்கு நாள்வளர்ந்து கொண்டே போகும். சிறியவர்களுடைய நட்பு நாளுக்கு நாள் குறையும். ஆதலின் பெரியோர்களுடைய நட்பே கொள்ளத்தக்கது. பெரியவர்கள் எல்லாரும் கொண் டாடத் தக்கபடி சிறந்து விளங்குவது எதனால்? அவர் கள் எல்லாரிடமும் பணிவாய் நடந்து கொள்வதனாலே யாம். பணக்காரர்களிடம் ஈகையும் கற்றவர்களிடம் அடக்கமும் சிறந்து விளங்குவதுபோல் பெரியவரிடம் பணிவுடைமை சிறந்து விளங்கும்.

3. விவேகம் பெறுவதற்குரிய வழி.

(1) "எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே, அல்லாமல் வேறொன்றும் அறியேன் பராபரமே" என்று

தாயுமானவர் கூறியுள்ள திருவாக்கை எண்ணி அதன்படி நடப்பது.

(2) நல்ல செய்கைகளை நாடிச் செய்தல்; தீய செய்கைகளைச் சிந்தியாதிருத்தல்.

(3) கொடிய நெறியை விட்டொழித்தல்; நல்ல நெறியைக் கடைப்பிடித்தல்—ஆகிய இவைகளேயாம்.

4. தன்மறப்பு, தியாகம், நடுநிலைமை, மனச்சாட்சி, சாந்தம், சத்தியம் முதலிய சற்குணங்கள் உடையவரே உண்மைத் தேசாபிமானிகள். இவர்களே மனோசக்தி யுடையவர்களாவர் தாம் மேற்கொண்ட காரியங்களைச்செய்து முடிக்கத்தக்க திறமை உடையவராவர்.

5. வாக்கு, மனம், செய்கை மூன்றும் ஒன்றுபட்டு நடக்கும் தேசாபிமானிகள் பலர் தோன்றவேண்டும். அப்படித் தோன்றிய புண்ணிய புருஷர்கள், பால கங்காதர திலகர், தாதாபாய் நௌரோஜி, லாலாலஜபதி ராய், மகாத்மா காந்தி, தேசபந்து தாஸ் இவர்களேயாவர்.

6. வேலை செய்யாதவனுக்குக் கூலி கிடைக்குமா? கிடைக்காது. அதுபோல் பரிசுத்த குணமில்லாதவனுக்குப் பரமகிருபாநிதியாகிய ஈசுவரனுடைய திருவருட்செல்வம் கிடைக்காது. ஈசுவரனுடைய திருவருட்செல்வம் உன்னை வந்தடையுமாறு நீ நல்லவழியில் நட.

---

## ஹாஸ்யம்.

ஒரு போர்வீரன் - நான் முன்னொரு சமயம் நடந்த போரில், நான்கு பேருடைய கால்களை ஒரே தடவையில் வெட்டினேன் என்று பெருமைபேசிக்கொண்டான். அதைக்கேட்ட மற்றவர்கள், "பகைவரின் தலையைவாங்குதல் சூரனுக்கழகேயல்லது காலை வெட்டியது பெரிதல்ல. அல்லாமலும் அது தருமமுமல்ல" என்றனர். அவன், "நான்காலைவெட்டியவர்களின் தலைகளை அதற்குமுன் யாரோ வெட்டிவிட்டார்கள்; அதனாலே தான் நான் காலை வெட்டினேன்" என்றான்.

# நுண்ணிதும் எண்ணிதன்.

தூக்கிவினை செய்யென்று சொன்னமதி யெண்ணாமல்
வாக்கைச் செலவிடுதல் மாண்பல்ல—நோக்கினது
போர்வீரங் கூறிப் புறப்பட்ட உத்தரன்றன்
பேர்வீர மாகுமென்று பேசு.

விராடம் என்று ஒரு தேசமிருந்தது. அந்தத் தேச அரசன் நல்ல நீதிமான். அவனுக்கு ஒரு புத்திர னிருந்தான். அவனுக்கு உத்தரன் என்று பெயர். உத்தரன் சிறுவனாயிருக்கும்போதே அரசர்க்குரிய பராக்கிரமமுடையவனாயும் டாம்பீகனாயுமிருந்தான். அவன் தன் தாய்தந்தையர்களுக்கு அடங்கி நடந்து வந்தான். ஆயினும் அவன் சிற்சில சமயங்களில் இரா ஜாங்க விவகாரங்களில் மிகப் பழக்கமுடையவன்போல் பேசுவான்; எதையும் இலட்சியஞ் செய்யவேமாட் டான்; எனக்கிது வரவா செலவா என்று கூறுவான். வீரப்பேச்சே அவன் வாய்ப்பேச்சாகவிருக்கும்.

ஆனால், உத்தரன் நல்லவன்; வீண்வம்பு வழக்கு களுக்குப் போகவேமாட்டான்; எல்லோருக்கும் நல்ல வனாகவே இருப்பான். இவனிடத்தில் எல்லோரும் பிரியமாகவே நடப்பார்கள். பெற்றோர் இவனைத் தங் கள் கண்போலும் உயிர்போலுங் கருதி ஆதரித்து வந் தார்கள்.

உத்தரன் இவ்வாறு மிகச்செல்வமாய் வளருங் காலையில், பாண்டவர்கள் தாங்கள் மறைந்து வாழவேண் டிய ஒரு வருஷத்தையும் விராட வேந்தனிடம் மாறு வேஷத்துடனிருந்து கழித்து வந்தனர். அப்போது

துரியோதனன் பாண்டவர்களைக் கண்டுபிடிக்கப் பல வழியிலும் சூழ்ச்சிகள்செய்து பார்த்தான். ஒன்றும் அவனுக்குக் கைகூடிவரவில்லை. பிறகு அவன் சபை கூட்டி ஆலோசனை செய்தான். சபையிலிருந்த பெரியார், "பாண்டவர்களெங்கே வசிக்கிறார்களோ, அங்கே பூமி செழித்திருக்கும். சகல வளங்களும் சிறந்திருக்கும். இதைத் தேடி யறிந்தாயாயின் அவர்களைக் கண்டு பிடிக்கலாம்" என்றார்கள். பிறகு துரியோதனன் அப் படிப்பட்ட வளமுள்ள தேசத்தைக் கண்டுபிடிக்கும்படி நெடுகலும் ஆட்களை அனுப்பினான். நெடுகலும் அவர்கள் போய்த் தேடிப் பார்த்து "விராட நகரமே எல்லா வற்றினும் செழிப்புடையதாயிருக்கிறது" என்று சொன்னார்கள்.

அப்பால் துரியோதனன், அங்கேதான் பாண்டவர்களிருக்கிறார்கள் என்று நிச்சயித்தான்; "விராடனை வலுவில் சண்டைக்கிழுத்தால், அவனுக்கு உதவியாகப் பாண்டவர்கள் வருவார்கள்; வந்தால் நாமெப்படியும் அவர்களைக் கண்டுபிடித்து விடலாம்" என்று தீர்மானித்தான். பிறகு சேனைகளை விராட தேசத்திற்கு அனுப்பினான்.

சேனைகள் அந்ததேசஞ் சென்று பசு மந்தைகளை மடக்கின. அதையறிந்த விராடன் சேனைகளை ஆயத்தப் படுத்தினான். மாறுவேஷத்தோடிருந்த பாண்டவர்கள் சேனைகளோடு சென்று துரியோதனன் சேனைகளைத் துரத்தி யடித்துப் பசுமந்தைகளை மீட்டனர்.

இப்படியிருக்கையில் உத்தரன் குதூகலமாக அரண்மனையிலொரு பக்கம் போனான். அங்கு ஒரு சுவரில் பலவகைச் சித்திரங்கள் எழுதப்பட்டிருந்தன. அவைகளில் ஒன்று போர்வீரர்கள் ஆயுதங்களைக்

கையிற் பிடித்துக்கொண்டு யுத்தத்திற்குச் சித்தமா யிருப்பதுபோல் எழுதியிருந்தது. அதைக் கண்ட உத்தரன், தனக்குப் பின்னிருந்த வேலையாளைப் பார்த்து, "இது என்ன?" என்று கேட்டான். அவன், இவர்க ளெல்லாம் யுத்தவீரர்கள்; சண்டை செய்கிறார்கள்" என்று சொன்னான்.

உத்தரன், "ஓகோ, இவர்கள் சண்டையில் மகா வல்லவர்களோ? இவர்களுடைய வீரத்தன்மையை இதோ பார்க்கின்றேன்" என்றுகூறித் தன் கையிலிருந்த பிரம்பினால் அந்த உருவங்களை அடித்தான். அவை வாய் திறந்தொன்றுஞ் சொல்லாமையினால், அவன் தன் உடல் குலுங்கச் சிரித்து, "இவர்கள் சாமர்த்தி யம் இவ்வளவுதானா? சை! இவர்கள் வீரத்தன்மை நன்றாயிருக்கிறது. எந்த வீரரும் என் கைப் பிரம்பின் முன் நிற்பாரென்று எனக்குத் தோன்றவில்லை" என்று வீரம் பேசிக்கொண்டே நடந்து அவ்விடம் விட்டுச் சென்று அரசனுடைய கொலுமண்டபம் போனான்.

இப்பொழுது சபையில் அரசன் மந்திரி பிரதானி களுடனிருந்து தன் எதிரிகளைப்பற்றிப் பேசிக்கொண் டிருந்தான். அங்கு இச்சமயம் ஒரு தூதன் ஓடிவந்து, "துரியோதனனே போருக்குப் பெருஞ்சேனைகளுடன் வந்திருக்கிறான்" என்றான். என்றதும் விராடராஜன், "அவனை யெதிர்த்துப் போர்செய்ய யாரை யனுப்பு வது?" என்று கேட்டான். அந்தச்சொல் கேட்ட உத்தரன், "தந்தையே என்னை அனுப்புங்கள்! நான் இக்கணமே போய் அவர்களை அதஞ்செய்து வரு கிறேன்" என்றான்.

அரசன் தன் மகனுடைய அந்த வீரப்பேச்சைக் கேட்டு ஸந்தோஷமடைந்து, "இப்பொழுதுதான் நான் பிள்ளையைப் பெற்றவனானேன்" என்று அவனைத் தழுவிக்கொண்டு, "அப்பனே நீயே புறப்படு யுத்தத்திற்கு" என்றான். அங்கு கங்குபட்டர் என்கிற பெயர்கொண்டு வீற்றிருந்த தருமபுத்திரர், அரசனைப் பார்த்து, "வேந்தே, உத்தரன் சிறுவன்; உலக வழக்கம் பழகாதவன்; யுத்தமென்பதையே பாராதவன். ஆதலினால் அவனுக்குத் துணையாக நம்மிடமுள்ள பேடியையும் அனுப்புவது நலம்" என்றார்.

உத்தரன், "எனக்கு ஒருவருடைய துணை யென்னத்திற்கு? நான் ஒருவனே எப்படிப்பட்ட பெருஞ் சேனையையும் கலக்கி, கதறவடிப்பேன்" என்றான். தருமபுத்திரர், "நியாயந்தான், உன்னுடைய இரதத்தைச் செலுத்த ஒரு சாரதி வேண்டாமா? அதற்காவது பேடி உன்னுடன் வரட்டும்" என்றார்.

உத்தரன் ஒப்புக்கொண்டான். பிறகு அரசனுடைய கட்டளைப்படி பேடி இரத சாரதியானான். உத்தரன் யுத்தகோலங்கொண்டு இரதத்திலேறினான். பேடி இரதத்தை வெகு வேகமாய்ச் செலுத்தினான். இரதம் போய்க்கொண்டிருக்கும்போதே வெகு தூரத்திலிருந்த யுத்தகளத்தை உத்தரன் கண்டான். அங்கே கோடாநுகோடி வாட்கள் சூரியவெளிச்சத்தில் பளபளவென்று மின்னின. ஈட்டிகளும் பாலாக்களும் துப்பாக்கிகளும் வரிசையாய் நிறைந்து பார்க்கப் பயங்கரமாக உயரத்தில் தெரிந்தன. யானைகளின் மேலும் குதிரைகளின் மேலும் வீரர்கள் ஆயுதங்களுடன் வரிசை வரிசையாய் அணிவகுத்து நின்றனர்.

இப்படிப்பட்ட போர்க்களத்தைக் கண்டதும், உத்தரன் பயந்தான். "நான் வீட்டிலே பார்த்த வீரர்கள் அசைவற்றிருந்தார்கள். இவர்கள் வீர ஆரவாரம் செய்கின்றனர். இவர்களை நான் எப்படி எதிர்ப்பேன்?" என்று எண்ணிக் கலங்கினான். அதைக் கண்ட பேடியாகிய அருச்சுனன், "சண்டைக்கென்று புறப்பட்ட ஒரு வீரன் முன்வைத்த காலைப் பின் வைப்பதா? அது வீரத்தன்மைக் கழகல்ல; தைரியமாயிருந்து சண்டையிடவேண்டும்" என்றான்.

உத்தரன், "அப்பா! இதுபடையா? இது ஒரு பெரிய சமுத்திரம்போலிருக்கிறதே! அப்பப்பா திரும்பிப்பார்த்தால் கர்ப்பங் கலங்குகிறதே! நான் வரமாட்டேன் சண்டைக்கு! எனக்குவந்த நஷ்டம் வரட்டும். அப்பா, இவர்களிடத்தில் நானகப்பட்டுத் தப்புவதெப்படி? உனக்கு வாய்ப்பேச்சுப் பேச வருத்தமா? இரதத்தைத் திருப்பி ஓட்டு. உனக்கு வேண்டியதெல்லாம் தருகின்றேன். என்னை விட்டுவிடு. நாளைப் போகிறேன் இங்கிருந்தபடியே! ஐயோ என்வாய்க்கொழுப்பே எனக்கிப்படிவந்து சம்பவித்தது. அடி மகாராஜி, நீ என்னைத் துன்பப்படுத்தாதே! என்னை எப்படியாவது என் தாயாரிடத்தில் சேர்த்து விட்டால் போதும். நீ தான் எனக்குத் தெய்வம். அப்பொழுதே கங்குபட்டராகிய பெரியவர் சொன்னார். அதை நான் இலட்சியம் செய்யவில்லை. தவிர முன்பே இதைப்பற்றி ஆலோசிக்கவுமில்லை. அதனால்வந்த கஷ்டம் இப்போது தெரிகிறது. இரதத்தைத் திருப்பு சீக்கிரம்"—என்று அருச்சுனனைப் பார்த்துக் கைகூப்பினான்.

பிறகு அருச்சுனன் வேண்டிய சமாதானஞ் சொல்லித் தானே போரில் முன்னின்று சேனைகளை யெதிர்த்துத் துரியோதனனை வென்று உத்தரனை ஜயகோலத்தோடு அரண்மனைக்கு அழைத்துப் போனான். பார்த்தீர்களா, இதனாலேதான் ஔவையார் தூக்கி வினைசெய் யென்று போதித்தார். அந்தப்படி ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்குவதன்முன் ஆலோசித்துப் பின்பு இதை முடித்தற்காகும் முடித்தற்காகாது என்று வாக்குத் தரவேண்டும். அப்படிச் செய்யாமல், உத்தரன் போல் வீரம் பேசித் தொடங்கிய காரியத்தில் தவறடைவது பெருமை தராது என்று தெரிந்துகொள்வீர்களாக.

நுண்ணிதும் எண்ணி நண்—என்று போதனை யுண்டு. ஆகையினால் அற்ப காரியத்தையும் தீரயோசித்தபிறகே அதிற்பிரவேசிக்க வேண்டும். அப்பொழுது தான் காரிய சித்தியுண்டாகும்.

---

## கொடிதேனுங் கொலைதவிர்.

எவ்வுயிரும் பரா பரன்ஸந் நிதியதாகும்
இலங்குமுயி ருட லனைத்தும் ஈசன்கோயில்
எவ்வுயிரும் எம்முயிர்போல் என்று நோக்கி
இரங்காது கொன்றருந்தும் இழிவினோரை
வவ்வியம தூதரருந் தண்டஞ் செய்து
வல்லிரும்பை யுருக்கியவர் வாயில் வார்த்து
வெவ்விய தீ யெழுநரகில் வீழ்த்தி மாறா
வேதனை செய்திடுவரென ஓதும் நூலே.

(சிவஞான தீபம்.)

# மனைவியின் கடமை

## ஸீதாதேவி.

---

ஸீதாதேவி யார்? ஸ்ரீராம மூர்த்தியின் மனைவி, ஜனக மகாராஜனுடைய பெண். இதை நீங்கள் வாசித்திருக்கிறீர்கள். ஸீதை சகல நல்லகுணங்களு முடையவள்; தன் நாயகனைத் தன் உயிர் போலவும் தன் தெய்வம் போலவும் எண்ணிப் பணிவாய் நடப்பவள்; மாமி, மாமன் முதலியவர்களிடத்திலும் மரியாதை தவறாமல் நடந்து வந்தவள்; பெரியோர்களிடத்தில் பக்தியுடையவள்; தன்கணவனுக்குப் பிரியமானதையே செய்து வருவாள்.

ஸீதாதேவியை ஸ்ரீராம மூர்த்தியும் அன்பாய் ஆதரித்து வருவார். இருவரும் பூவும்மணமும் போல் ஒத்திருப்பார்கள். இவர்களுடைய ஒற்றுமையையும் நடவடிக்கைகளையும் கண்டு எல்லோரும் புகழ்வார்கள். ஸ்ரீராமமூர்த்திக்குப் பட்டங்கட்டப் போவதாக அவர் தந்தை ஏற்பாடு செய்தாரல்லவா? அப்பொழுது ஸீதாதேவி தன் நாயகனுடைய க்ஷேமத்தை யெண்ணித் தன் இஷ்ட தெய்வத்தைப் பூஜைசெய்தாள். மாதர்களுக்குக் கணவனுடைய க்ஷேமந்தானே பெரிது?

ஸீதாதேவி, தன் நாயகனுக்குப் பட்டாபிஷேகம் நடக்கும் என்று என்றுமடையாத சந்தோஷங்கொண்டிருந்தாள். பெண்களுக்குக் கணவனுடைய வாழ்வு தானே தங்கள் வாழ்வு?—திடீரென்று பட்டாபிஷேகம்

நின்று ஸ்ரீராமமூர்த்தி காட்டுக்குப் போகும்படியாயிற்றல்லவா? ஆகவே ஸ்ரீராமமூர்த்தி தமது தாயாரிடம் விடைகொண்டு மனைவியிடம் விடைகொள்ள வந்தார்.

ஸீதாதேவி தன் நாயகன் பட்டாபிஷேக சமயத்தில் தனியே வருவதைக் கண்டதும் திடுக்கிட்டு நின்றாள்; பிறகு வணங்கி, "இப்படி வரக் காரணமென்ன?" என்று கேட்டாள். ஸ்ரீராமமூர்த்தி தனது தந்தையின் கட்டளையைத் தெரிவித்தார். ஸீதை கேட்டதும்' "காட்டிற்கு அனுப்புவானேன்?" ஏதாவது குற்றம் செய்தீர்களா?" என்று கேட்டாள். ஸ்ரீராமமூர்த்தி, "நான் குற்றம் ஒன்றும் செய்யவில்லை. சிற்றன்னையார் தந்தையிடம் அப்படி வரங் கேட்டுக் கொண்டார். அதன்படி தந்தை என்னைக் காட்டுக்கு அனுப்பினார். பரதனுக்குப் பட்டாபிஷேகம் நடக்கும்" என்றார்.

ஸீதாதேவி, "பட்டாபிஷேகம் அவர்க்கே நடக்கட்டும். அதனாலென்ன? நாமிங்கிருக்கலாகாதா?" என்று கேட்டாள். ஸ்ரீராமமூர்த்தி, "சிற்றன்னையாரின் சித்தம் அது. அதனாலென்ன? நான் போய் வருகிறேன். நீ இங்கேயே இரு. உன் மாமிமார்களுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய். உன் மனத்தைத் திடப்படுத்திக்கொள். நான் காட்டிலிருக்கும் போது நீ இங்கிருந்து விரதம் செய். உபவாசமிரு. தேவாராதனையைத் தவறாமல்செய். என் தம்பிமார்களை உன் புத்திரர்களாக எண்ணி அன்பாய் நடத்து. நீ ஒருவருக்கும் பிரியமில்லாததைச் செய்வதில்லையல்

லவா? அதுபோல் என் பேச்சைத் தட்டாமல் இங்கேயே இரு" என்று சொன்னார்.

ஸீதாதேவி ஸ்ரீராமமூர்த்திக்கு வெகு பிரியமுடையவளல்லவா? இதைக்கேட்டதும் அந்தப் பிரியத்தினாலே கோபங் கொண்டாள்; "நாதா, இப்படி எளிதாக எனக்கு உறுதி சொல்லுகின்றீர்? நீர் பேசுவது நியாயமா?—நாதா தாய், தந்தை புத்திரர்—முதலிய யாவரும் அவரவர் செய்த புண்ணியங்களையும் பாபங்களையும் அநுபவிக்கிறார்கள். மனைவி ஒருத்தியே தன் கணவனுடைய புண்ய பாவங்களைப் பங்கிட்டுக் கொள்கிறாள். ஆகையினால் உமக்கிட்ட கட்டளை எனக்குமுண்டு" என்றாள்.

ஸீதாதேவி எடுத்துக்காட்டிய நியாயத்தைக்கேட்டு ஸ்ரீராமமூர்த்தி மகிழ்ந்தார். ஆனாலும் அதை வெளிக்குக் காட்டிக்கொள்ளவில்லை. "கண்மணி, நீ சொன்னது நியாயந்தான். காட்டிலே அநேக கஷ்டங்களுண்டாகும். ஆகையினால் உன்னை அழைத்துக்கொண்டுபோக என் மனம் துணியவில்லை. நீ இங்கேயேயிருந்து விரதங்களைச் செய்துவா" என்றார்.

ஸீதாதேவி, "நாதா நான் என்ன குற்றம் செய்தேன்? என்னையேன் இப்படிப் பிரிந்து செல்லப் பார்க்கிறீர்? எனக்கு உம்மையல்லாமல் வேறு கதியுண்டோ? ஸ்திரீகளுக்குத் தாய், தந்தை, புத்திரி, தோழி இந்த உறவினர் உதவியாகிறதுண்டோ?— நாதா, கணவன் எங்கேயிருந்தாலும் மனைவி அவனுடைய திருவடிநிழலே கதியாயிருக்க வேண்டியவளல்லவா? அது மாறுவதாகுமா? காட்டில் என்னால் உமக்கு ஒரு கஷ்டமும் உண்டாகாமல் நான் நடந்து கொள்வேன்" என்றாள்

ஸீதாதேவியின் முகத்தைப் பார்க்க ஸ்ரீ ராம மூர்த்தியின் மனம் கலங்கியது. ஆகையினால் அவர் ஒருபக்கம் பார்த்துக்கொண்டே, "ஸீதே, நீ காட்டுக்கு என்னோடு வந்து வசிக்கிற எண்ணத்தை விட்டுவிடு. காட்டிலே கொஞ்சமும் சுகமிராது. துன்பந்தான் மிகுதியாயிருக்கும். சிங்கம், புலி, கரடி, யானை, சிவிங்கி முதலிய துஷ்டமிருகங்கள் அங்கே உலாவும். ஜனங்களே இருக்கமாட்டார்கள். சில இடங்களில் நடக்கப் பாதைகூட இராது. மரத்திலிருந்து சருகுகள் உதிர்ந்திருக்குமே அதிலேதான் படுக்கவேண்டும். காயும் கனியுந்தான் உணவு. அங்கே பசி அதிகமாய் எடுக்கும். ஆகையினால் நீ காட்டுக்கு வருவது தகுதியல்ல" என்றார்.

ஸீதாதேவிக்கு இப்பொழுது பொறுக்க முடியாத துக்கம் உண்டாய்விட்டது. அவள் கண்களிலிருந்து ஜலம் பெருகிற்று. அவள் கண்களைத் துடைத்துக் கொண்டு, "நாதா, நீர் சொன்ன கஷ்டங்களெல்லாம் உம்மிடம் அன்புள்ள எனக்கு இன்பமாகவே இருக்கும். அதற்காகத் தாம் கவலைப்படவேண்டாம். உம்மைப் பிரிந்தால் என் உயிர் போய்விடும். நாதா, கஷ்டமென்பது யாருக்கு? நல்ல மனமில்லாதவர்களுக் கல்லவா? எனக்கு நீர்தாம் தெய்வம். நீர் எங்கிருந்தாலும் நானும் அங்கிருப்பேன். அதுதான் எனக்குப் பெருமை" என்று சொல்லி வணங்கினாள்.

ஸீதாதேவி துக்கப்படுவதைப் பொறுக்கமுடியாத ஸ்ரீராமமூர்த்தி, "ஸீதே, துக்கப்படாதே! உனக்குத் துன்பம் தருவதை நான் விரும்பேன். உன்னைக் காப்

பாற்ற வல்லமையில்லாதவனல்லன் நான். எங்கிருந்தா லும் காப்பாற்றுவேன். நான் உன் எண்ணத்தை அறிந் தேன்; உன்னைவிட்டுப் பிரியேன். என்னுடன் கூடவா. வந்து தருமங்களைச்செய்'' என்றார்.

ஸீதாதேவி சந்தோஷ மடைந்து கண்களைத் துடைத்துக்கொண்டு, "நான் பாக்கியவதியானேன்! என் தவம் பலித்தது'' என்றாள். ஸ்ரீராமமூர்த்தி, உன் விருப்பப்படி பொருள்களை ஏழைகளுக்குக்கொடு. உடனே தாமதியாமல் புறப்படு'' என்றார்.

ஸீதாதேவி தன் கணவன் சொல்லியபடி தன் பொருள்களை யெல்லாம் ஏழை எளியவர்களுக்குக் கொடுத்துவிட்டுக் காட்டுக்குப் போக சித்தமானாள். இஃதன்றோ மனைவியின் கடமை.

## பிள்ளைகளுக்கோரு எச்சரிக்கை.

பிள்ளைகளே, ஒருவர் உங்களிடம் ஒரு விஷயத் தைப் பேசிக்கொண் டிருக்கும்போது நீங்கள் அவர் களைக் கவயாணிமல் காதைக் குச்சியால் குடைந்து கொண்டும் மூக்கைத் திரியைவிட்டுத் தும்பிக்கொண்டும் தலையைச் சொரிந்துகொண்டும் இராதேயுங்கள். அது பெரிய தவறு. உங்களுடன் பேசுகிறவன் மூடனாயிருந் தாலும் நீங்கள் அவன் முகம்பார்த்து நின்று மெதுவாய் அவனிடமிருந்து நழுவிவிடப்பாருங்கள். சில மூடர் கள் "நாம் சொல்வதை இவன் கவனிக்கவில்லையே! என்றெண்ணிச் சினங்கொண்டு அடித்துவிடவுங் கூடும். ஆகையினால் யார் உங்களிடம் எதைப்பேசினாலும் நீங் கள் அவர்களை ஆதரித்துக் கேட்பதுபோலவே காட்டிக் கொள்ளவேண்டும். இது உலக நடவடிக்கைகளில் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய அம்சங்களில் ஒன்றாகும்.

## கர்வீ அவமானமடைவான்

ஒரு கிராமத்தில் ஒரு வேளாளனிருந்தான். அவ னுக்குப் பிள்ளைகள் பிறந்து பிள்ளைகளுக்கும் பிள்ளை கள் பிறந்து அவன் தாதாவானான். தாதாவான பின் பும் கர்வியாயிருந்தான். யார் வந்து எதைப்பேசினும் அதற்கு ஏதேனும் இடக்கு வார்த்தைகள் பேசி அவர் களை மடக்கியனுப்புவான்.

இப்படிப்பட்ட இறுமாப்பிலே மகிழ்ந்திருந்த அவன் ஒருநாள் தன் ஊருக்குச் சமீபமாய் இன்னொரு ஊரில் வசித்துவந்த தன் நண்பனைப்பார்க்கச் சென்றான். நண்பன் அவனை அன்பாய் வரவேற் றுபசரித்தான். உப சரித்தானாயினும் இவன் கர்வியென்பதை அவன் நன்றா யறிவான். ஆதலால் இவனுக்குத் தக்கபடி நடந்து கொண்டான்.

இருவரும் போஜனஞ்செய்து ஓரிடத்தில் வீற் றிருந்து சம்பாஷித்துக்கொண் டிருக்கையில், அந்தப் பக்கமாய் ஒருபெண் வெகு அடக்க ஒடுக்கமாகச் சென் றனள். கர்வி அந்தப்பெண்ணைக் கண்டதும், "இந்தப் பெண்யார்? உன்னுடைய பெண்தானா? வெகு அடக்க ஒடுக்கமாகச் செல்லுகிறாள். நல்ல புத்திசாலி" என் றான்.

சினேகிதன், "இந்தப்பெண் என்னுடைய பெண் தான். ஜகதீசனுடைய திருவருளால் இந்தப்பெண் இந் தச் சிறுவயதிலேயே தங்களைப் போன்றவர்களும் வியந்துபேசும்படி அடங்கி நடந்துகொள்கிறது. இது பற்றி எங்கள் வீட்டில் எல்லோரும் மகிழ்வதுண்டு" என்றான்.

கர்வி, அவன் பேச்சுக்கு ஏதாவது இடக்குப் பேசவேண்டுமென்கிற எண்ணங்கொண்டு, "சிறுவயதில் இப்படி அடக்கமாயிருக்கும் குழந்தைகளெல்லாம் பிறகு அடங்காப் பிடாரியாய்விடும். இதைக்கண்டு மகிழ்வது கூடாது" என்றான்.

இதை ஒருபக்கம் நின்றுகேட்டுக்கொண்டிருந்த அந்தப்பெண், பொட்டென முன்வந்து, "அப்படியானல் தாங்கள் சிறுவயதில் அதிக புத்திசாலியா யிருந்திருப்பீர்களென்று நினைக்கிறேன்" என்று சொல்லிவிட்டு அப்பாற் போய்விட்டாள். சினேகிதர் குப்பென்று நகைத்துவிட்டார். சிறுமி பேசியது, நீர் இப்போது மடையர் என்று பொருள் தருகிறபடியால், கர்வி, நாணமடைந்து, அசட்டுப் புன்னகையில் முகத்தை அலங்கரித்துக்கொண்டு "ஆம்" என அரைவார்த்தை பேசித் தன் மனதிற்குள், "நாம் இனி யாரிடமும் கர்வமாயும் குறும்புத்தனமாயும் பேசக்கூடாது" என்று எண்ணிக்கொண்டு, வேறு பேசி அதனை மறைத்தான்.

ஆதலினல்—அடங்கி நல்வழியில் நடந்துகோள் புவியில்.

---

## பழமொழிகள்.

(1) தொட்டுக்காட்டாத வித்தை சுட்டுப்போட்டாலும் வராது. குருவில்லா வித்தைபாழ்.

(2) கல்லாதார் செல்வத்திலும் கற்றார் வறுமையே நலம். இது கல்வியுடையவரின் பெருமையை விளக்குவது காண்க.

(3) தாழ்ந்து நின்றால் வாழ்ந்து நிற்பாய். இது "அடக்கம் அமரருள்உய்க்கும்" என்பதை விளக்குவது காண்க.

ஸ்ரீ

# ஸ்ரீ ராமவதாரம்

(61-ம் பக்கத் தொடர்ச்சி)

பின்னரும் அவ்வக்ஷகுமாரன் தன் தந்தையைப் பார்த்து "எந்தையே! எனக்கெங்கே கெடுதி நேரிட்டு விடுமோ என்கிற கவலை தங்களுக்கு வேண்டாம். சிவ பிரானுடைய வாகனமாகிய நந்தியே இவ்வுருக்கொண்டு வந்திருப்பதாயினும், அல்லது திருமாலின் வாகனமாகிய கருடனே இவ்விதம் வந்திருப்பதாயினும் அல்லது வந் திருக்கும் இக்குரங்கு அத்திருமால் பள்ளிகொள்ளும் ஆதிசேடனேயானாலும், திக்கஜங்களிலொன்றாயிருந்தா லும், பாதகமில்லை. அதன்மீது சீற்றங்கொண்டு நேரே சென்று தாங்கள் அதை எதிர்க்க உத்தேசிப்பது தங்க ளுடைய பிரபாவத்துக்குக் குறைவாகும். நானிருக் கும்போது தாங்கள் ஏன் இத்தகைய பேராலோசனைப் பெருங்கடலில் மூழ்கவேண்டும்? முன்னொரு சமயம், தேவேந்திரனைப்பிடித்து வரும்படி என் அண்ணனை இந்திரஜித்தை ஏவினீர்கள். அப்போது அடியேன் தங்களருகிற்றானிருந்தேன். அப்பணியை எனக்கிடா மற் போயினீர்கள். அது என் சிந்தையை வருத்திக் கொண்டே யிருக்கிறது. அந்த வருத்தந்தீர இப்போ தாவது அக்குரங்கைப் பிடித்துவர என்னை யனுப்ப வேண்டும். கிள்ளி யெறியத்தக்க தளிர்களைத் தின்று ஜீவிக்கும் வாழ்க்கையையுடைய ஒரு குரங்கின் உரு வைத் தாங்கி நமக்குத் துன்பஞ்செய்ய, இமைத்தலில்

லாத மூன்று கண்களையுடைய அந்தச் சிவனே வந்திருந்தபோதிலும் நான் அஞ்சப்பட்டவனல்லவே; ஒரு காலத்தில் தூணினின்றும் வெளிப்பட்ட மிக்க பராக்கிரமம் பொருந்திய அந்த நரசிங்கமே அல்லது புவியைக் குடைந்துசென்று, எவரினும் முரணியனுய் விளங்கிய இரணியாக்ஷனைச் சங்கரித்த ஆதிவாகமே இக்குரங் கானுலும் எனது பேராற்றலின்முன் அது நிற்காது என்பதை மறக்கவேண்டாம்" என்று பலபல சொல்லி வேண்டிக்கொண்டான். இராவணனும் அவன் வேண்டுகோளுக்கிசைந்து போய்வரக் கட்டளையிட்டான்.

விஷமானது திரண்டுருண்டோர் வடிவம் பெற்றது போன்ற இராவணன் இக்கட்டளையை அளித்ததும் அக்ஷகுமாரன் தனது புஜங்களைத்தட்டி ஆரவாரஞ் செய்தான். உடனே இராக்ஷஸ சேனைவெள்ளத்தைத் திரட்டிக்கொண்டு அவன் வெளியேவந்து அஞ்சனைச் செல்வராகிய ஆஞ்சநேயரைச் சூழ்ந்து கொண்டான். ஆஞ்சநேயருக்கும் அரக்கர் சேனைக்கும் பெரும்போர் மூண்டது. அக்ஷகுமாரன் தன்னிடத்துள்ள வாள், கதை, தோமரம் முதலிய பற்பல ஆயுதங்களைக்கொண்டு கொடிய யுத்தத்தை நடத்தினுன். மாருதியினிடமோ ஓராயுதமுமில்லை. அவருடைய கைகளே அவருக்குச் சிறந்த ஆயுதமாயிருந்தன. இவ்விருவருக்கும் நேர்ந்த கொடிய சண்டையைக் கண்ணுற்ற தேவர்கள் "இது யாதாய் முடியுமோ?" என்று மிக்க வியப்புடனும் பயங்காரத்துடனும் விழித்த கண் விழித்தபடியே பார்த்திருந்தனர். அக்ஷகுமாரனுக்கும் வாயுபுத்திரர்க்கும் நடந்த யுத்தத்தின் மகாத்மியம் சொல்லுக்கடங்கியதன்று. மாருதியின் வல்லமையைக்கண்ட அரக்கர் பலர்

மிருகங்களாகவும், பறவைகளாகவும், மனிதர்களாக வும், முனிவர்களாகவும் மற்றும் பல வுருவாகவும் மாறி ஓடத்தொடங்கினார்கள். கடைசியில் அக்ஷசகுமாரனும் எமனுலகடையலானான்.

இவ்விசேஷத்தைக் கேட்ட இராவணன் முதலான வர் துக்கக்கடலில் மூழ்கலாயினர். அப்போது இந்திர ஜித்தன் தசக்கிரீவன் முன்வந்து "தந்தையே! என் வார்த்தையை மறுத்து என்னுடைய தம்பியை அனுப்பி மாளவைத்து இத்துன்பத்துக் காளாகினீர்கள். நானே போயிருந்தால் இத்தகைய சம்பவம் ஒருபோதும் நேர்ந் திராது. இனி வருந்துவதிற் பயனில்லை. இப்போ தாவது எனக்கு உத்தரவு கொடும். ஒரு நொடியில் அந்தக்குரங்கை வென்று வருகிறேன். சகல உலகங் களையும் முடிவுகாலத்தில் அழிக்கவல்ல சங்கரனே இந்த வுருவமாக வந்தானோ? அல்லது எல்லாவற்றையும் படைக்கத்தக்க பிரமனே நம்மை ஏமாற்ற இப்படி வந் தானோ? அல்லது இரக்ஷகமூர்த்தியே இவ்விதம் வந் தானோ? ஒன்றும் புலப்படவில்லை. அஷ்டதிக்கு யானை களும் நடுங்கத் திரிபுரத்தையும் எரித்த அந்தத் திரி நேத்திரனும் கிடுகிடென்று, அஞ்ச அவனுடைய கைலை யங்கிரியைத் தூக்கி மூன்று உலகங்களையும் வென்ற நின்முன் ஓரற்ப வானரம் எனது தம்பியையும் அவ னுடன் சென்ற சேனைகளையும் பாழாக்கியதென்றால் இது பழிப்புக்கிடமல்லவா? இதைவிட நமது உயிரை மாய்த்துக்கொள்வது நலமாகாதா? போகட்டும் என்னைத் தயவுசெய்து அனுப்புங்கள். ஒருகை பார்த்து வரு கிறேன்" என்றான்.

இராவணனும் அதற்குடன்பட்டான். உடனே இந்திரஜித்தன் யுத்தகோலத்துடன் பல சைனியங்கள் பின்னே வரப் புறப்பட்டான்.

இவ்விதம் வந்த இந்திரஜித்தைக்கண்டு ஆஞ்சனேயர் புன்னகை புரிந்தார். அந்த இந்திரஜித்தனுடைய சேனைகளோ பயங்கொண்டு "பாவி! வீணாக எங்களை வதைக்க இங்கேயழைத்து வந்தாயே" என்று நினைத்து வருந்தினார்கள். இவர்களையனுப்பிய இராவணனும் "அடடா! இதென்ன சனி! இப்படியும் நமக்கு ஒரு குரங்கினாலும் இரண்டு மனிதராலும் சஞ்சலம் நேரிடலாமோ? நாம் இதுவரையில் தேடிக்கொண்ட வீரம் இவ்வளவு தானா?" என்று சோகிக்கலானான்.

இந்திரஜித்துக்கும் அஞ்சனைச் செல்வர்க்கும் பெரும்போர் நடந்தது. தோற்பு கெலிப்பு தெரியாதபடி யுத்தம் நேர்ந்தது. இந்த யுத்தம் எவ்விதமாக முடியுமோ வென்று தேவர்களும் பயங்கொண்டார்கள். இந்திரஜித்து "ஆகா! நாம் தேவர்களுக்கெல்லாம் அதிபதியாகிய இந்திரனைச் சுலபமாக ஜெயித்தும் இந்தக் குரங்கை வெல்ல நம்மால் முடியவில்லையே" என்று வருந்தி, இதற்கென்ன செய்வதென்று ஆலோசித்து முடிவில் பிரமாஸ்திரத்தை விடுவதே தக்கதென்று தீர்மானித்து அதற்குரிய பூசனைகள் யாவும் குறைவற நிறைவேற்றி அபிமந்திரித்துவிட்டான். அது சர்ப்பரூபமாகிச்சென்று மாருதியைப் பிணித்துக்கொண்டது.

ஆஞ்சநேயர் அப்படைக்கலத்திற்கு மரியாதை செய்ய வேண்டுமென்று நினைத்துத் தமது பராக்கிரமத்தை மறைத்துவைத்தார். அதுகண்ட இராக்ஷஸர்

அவரை யப்படைகொண்டு இழுக்கலாயினர். இக்காட்சி அந்த இலங்காபுரியே பாற்கடலாகவும், பிரமாஸ்திர மான சர்ப்பமே வாசுகியாகவும், அரக்கர்களே தேவராக வும், ஆஞ்சநேயரே மந்தரகிரியாகவும் விளங்கித் திருப் பாற்கடலைக் கடைய நேர்ந்த தன்மையை ஒத்திருந்தது.

அல்லாமலும் ஆதிசேஷனுக்கும் வாயுபகவானுக் கும் உண்டாகிய சம்வாதத்தில் ஆதிசேஷன் சூழ்ந்து கொண்ட மேருமலையைப்போலும் விளங்கினர் ஆஞ்ச நேயர். இதனைக் கண்ட எல்லா இராக்ஷஸ புருஷரும் பெண்டிரும் தம்மக்களோடு ஆனந்திக்கலாயினர். இந் திரச்ஜித்தன் இந்திரனைப் பிடித்துக்கொண்ட நாளில் எவ்வித சந்தோஷத்தை அரக்கர்கள் அடைந்தார்களோ அவ்விதக் களிப்பை இப்போது அவர்கள் அடைந்தார் கள்.

"இந்தக் குரங்கைப் பிடியுங்கள்; அடியுங்கள்; குடலைப் பிடுங்கி எறியுங்கள்; உடலைத் தரையோடு தரையாகத் தேயுங்கள்; கடித்துத் தின்னுங்கள்; இதை உயிரோடு விட்டுவிட்டால் இனி நாம் பிழைப்ப தரிது" என்று இராக்ஷஸர்கள் கூக்குரலிட்டனர். "இன்னுமா இவ்வற்ப வானரத்தைக் கொல்லத் தாம தம்?" என்று கோபாவேசத்துடன் படமெடுத்த பாம்பைப்போற்சீறி இராக்ஷஸ ஸ்திரீகள் தம்மக்களுடன் சூழ்ந்துகொண்டனர்; ஆஞ்சநேயரைக் கொல்லவும் எத் தனித்தனர். மற்றுஞ் சிலர் அவரைப் பார்த்து "அடா வானரனே! நீ சாவது திண்ணம்; அதற்குள் நீ கொன்ற எங்களுடைய தந்தைமாரையும், தம்பிமாரை யும், முன்னோர்களையும் எங்களிடம் ஒப்புவித்துப்போ" என்றனர். சிலர், "தெய்வலோகத்திலுள்ள கட்டளை

யால் நமது உயிரைக் கொள்ளை கொள்ளவந்த குரங்கே இது'' என்று கூவினர். சிலர், ''மகா பராக்கிரமசாலி களாய் எங்களுக்குச் சமானமான கணவரை நாங்கள் இந்நாள் வரையில் பிறந்தறியோம்; இப்போது இக் குரங்கால் பிரிய நேரிட்டது. அந்தத் துன்பத்தை இந்தக் குரங்கின் தலைமீதிருந்துகொண்டு தீர்த்தவண்ணமாகவே எங்கள் மாங்கல்ய நாளை இழப்போம்'' என்றார் கள். இவ்வாறு கதறும் அரக்கிமார்கள் சந்தோஷிக்க அவர்கள்முன் அஞ்சநேயரைப் பிடித்துக்கொண்டு போயினர் அரக்கர். அக்காட்சியைக் கண்ணுற்ற இராக்ஷஸிகள் ''நமது அரசன் சிறை வைத்திருக்கும் சீதா தேவியின் கற்பைக் காக்கும்பொருட்டே கயிலாயபர்வதத்திலிருக்கும் மழுவாயுதத்தையுடைய சிவபிரானே ஒரு வானர ரூபங்கொண்டு நமது நகரைப் பாழ்படுத்த வந்தனன்'' என்று ஏங்கினார்கள்.

(வரும்)

---

## வேல் முருகன் துதி

தொடர்ச்சி—(ஆடுபாம்பே - மெட்டு)

சூரன்மனங் கண்டறிய வேல்முருகா—(வடிவேல் முரு)
தூதனுப்பி யூரழித்த வேல்முருகா
சீரணிந்த ஹேமகூடம் வேல்முருகா
தேவர்தொழ வந்தமர்ந்த வேல்முருகா. 7

இந்திரன்,வரபுத்ரன் வேல்முருகா—(வடி)
இரங்கிமன மேங்கியழ வேல்முருகா
கந்தமா தனத்தினின்று வேல்முருகா
கனவில்வந்து காட்சிதந்த வேல்முருகா. 8

பானுகோப னுதிவடி வேல்முருகா—(வடி)
பாதகன் குமாரர்களை வேல்முருகா
ஆனவீர வாகுவாலே வேல்முருகா
அமரிற் பொருதழித்த வேல்முருகா. 9

பால ஸரஸ்வதி தேவகுஞ்சரியம்மாள்.

# ஜீ வ க ன்.

(தொடர்ச்சி)

## அத்தியாயம் 4.

### ஜீவகன் வித்தியாப்பியாசம்.

நந்துக்கடன் கண்டெடுத்த குழந்தைக்குச் சீவகன் என்று நாமஞ்சூட்டி. அன்பாய் வளர்த்துவரும் நாளில் சுநந்தை ஓர் ஆண்குழவியை ஈன்றனள். நந்தட்டனென்னும் பெயருடைய அப்பாலகனும் சீவகனும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து வந்தனர். ஸ்ரீதத்தன், புத்திசேனன், பதுமுகன் முதலிய சிறூர்கள் சீவகனுக்குத் தோழர்களாயமைந்தனர். சீவகன், தன் தோழர்களுக்குத் தலைவனாகி ஓர் இளஞ்சிங்கத்தைப்போல் வளர்ந்து வந்தான்.

கோமனாகிய சீவகனுக்கு இளம் வயதில் செய்துமுடிக்கவேண்டிய சடங்குகளையெல்லாம் முற்றச்செய்து, கல்வி பயிற்றுவிக்க அச்சனந்தி என்னும் ஆசிரியர்பால் அவனை விடுத்தனர். சீவகனும் அவனுடைய தோழர்களும் சிறிது காலத்திற்குள் சகல சாஸ்திரங்களிலும் வல்லமை பெற்று இணையற்று விளங்கினார்கள். சீவகன் அஸ்திர சஸ்திர வித்தைகளிலும், யானையேற்றம் குதிரையேற்றம் முதலியவைகளிலும், இசைநூல்களிலும், பிறவற்றிலும் வல்லவனாய் சோடச கலைகளோடுங் கூடிய பூரண சந்திரனையொத்து விளங்கினான்.

இவ்வாறு வல்லுநர்களாக விளங்கும் வீர மைந்தர்களுக்குத் தருமோபதேசஞ் செய்ய, சீவகன் துறவு பூண முயற்சித்தான். இதனையறிந்த ஆசிரியர், நல்லற

மாகிய இல்லறத்தை நடத்தினாலன்றி, நித்தியமாகிய மோக்ஷத்தை அடைவதரிதென்று கூறச் சீவகனும் இல்லறத்துறையில் நிற்கச் சம்மதித்தான். சீவகனுக்கு அவன் சரித்திரத்தை உணர்த்துங்காலம் வந்ததை யறிந்த ஆசிரியர், அவனைத் தனியிடத்திற் கழைத்துச் சென்று, ஒரு கதை வாயிலாக அவனுக்கு அவன் வரலாற்றினை யுணர்த்தினார். உடனே சீவகன் கோபங் கொண்டு கட்டியங்காரனைக் கொல்ல எழுந்தான். "ஓராண்டு பொறுத்திரு; அவனைக் கொல்லுங் காலம் தன்று; இது யான் வேண்டுவது" என்று ஆசிரியர் தேற்ற அவனும் தேறினான்.

ஆசிரியர் இனி யான் தவஞ்செய் துய்யவேண்டும். எனக்கு விடைதருவாயாக." எனக் கேட்டனர். ஆசிரியர் பிரிதலிற் சிறிதும் மனங் கொள்ளாதவனாயிருந்தும், தவஞ்செய்துய்வதைத் தடுத்தல் தவறென்பதை யறிந்து ஜீவகன் விடைகொடுத்தனன். ஆசிரியரும் அரண்யஞ் சார்ந்து, ஆர்வவேர் களைந்து, அடைதற்கரிதான பெரும் பேற்றை யெய்தினார்.

---

## உதவி நீ உவந்து செய்

ஒருவன் பிறருக் குதவிசெய் வதனில்
பெரிதொரு புண்ணியம் பேசுதற் கில்லை
ஒருவன் பிறனுக் * கூறுசெய் வதனில்
பெரிதொரு பாவம் பேசுதற் கில்லை
வீரன் இராமன் விலங்கெனுங் குரங்கைக்
கோரி நல்லுதவி கொண்டனன் என்றால்
ஒருவனின் னொருவன் உதவிகொள் ளாமல்
இருநில வாழ்வும் எய்துவ தாமோ?

* பிறனுக்கூறு என்பதை, பிறனுக்கு + ஊறு என்று பிரித்துக்கொள்க. ஊறு = தீங்கு.

கோவிந்தையின் மணம்.

## அத்தியாயம் 5.

ஆசிரியர் அகன்றதும், ஜீவகன் யௌவனமான சுகுமார பருவத்தை யடைந்து எல்லா வித்தைகளிலும் தேற்சிபெற்று விளங்கினன்; இசை நூல் நாடக நூல்களிலும் வல்லவனாய்க் காணப்பட்டான்; உலகிற் சிறந்தவனென்று எல்லோராலும் மதிக்கப்பட்டு வந்தான்.

இவ்வாறிருக்கும் நாட்களில் பின் பனிக்காலம் வந்தது. ஆநிரை காப்பவர்கள் பசுக்களைக் காட்டிற்கோட்டிச் சென்றனர். குறிஞ்சி நிலமாக்களாகிய வேடர்கள் அந்நிரையைக் கவர்ந்துசெல்ல, கோவலர்கள் சென்று கட்டியங்காரனிடம் முறையிட்டனர். அவன் தனது குமாரர்களையும், மதனனையும் அனுப்பி வௌவப்பட்ட பசுநிரையைக் கவர்ந்து வருமாறு கட்டளையிட்டனன். அவர்கள் பசுக்களோடு செல்லும் வேடர்களை மடக்கிப் பெரும்போர் விளைத்தனர். அரசனது படையைச் சிதறவடித்த வேடர்கள் அவர்களிருப்பிடத்திற்குப் புறப்பட்டுப்போயினர்.

படை யுடைக்கப்பட்டதெனக் கேள்விப்பட்ட கட்டியங்காரன் ஒன்றுஞ்செய்யத் தோன்றாது பேசாமல் இருந்துவிட்டான். பசுநிரையை இழந்து அல்லல் படும் நந்தகோன், "என்னிரையைக்கவர்ந்து வருவார்க்கு என்மகள் கோவிந்தையைக் கொடுப்பேன்" என முரசறைவித்தான். கட்டியங்காரனுடைய படையால் மீட்க முடியாத நிரையை நாம் மீட்க வல்லேமல்லேம்

என்று சிலகாளையர் நினைந்திட்டு வாளாவிருந்திட்டனர். ஜீவகன் காதிற்கு இச்செய்தி எட்டவே, "நல்லொழுக்கத்தையும், பசுக்களையும் துறந்தோரையும், பெண்டிரையும், பாலரையும், வேதியரையும் பாதுகாத்தலன்றோ வீரர்கடமை? யானிதைக் காவாது போயின் பேடியாகக் கடவே"னென்று சூளுரைத்துத் தேர் மேற்கொண்டு விற்கையினனாகப் புறப்பட்டான். எண்ணிறந்த வேடர்களுக்கு எதிரே சென்று, தன் திறலினால் பல தேர்கள் தோன்றும்படி செய்யவே அவர்கள் அதைர்யத்தைக் கைப்பற்றி ஓடுங்கருத்தோடு ஆயுதங்களைத் தளரவிட்டனர். அவர்கள் தனது விரோதிகளல்லவாகையால் ஜீவகன் அவர்களைக் கொல்லாது அச்சுறுத்தி அனுப்பி விட்டுப்பசு நிரையைக் கொண்டுவந்து நந்தகோன்கையில் ஒப்புவித்தான்.

வெற்றிமாலை சூடிவந்த சீவகனை எல்லோரும் புகழ்ந்தனர். கட்டியங்காரன் மாத்திரம் அவன் மீது பொறாமை கொண்டான். இஃது சிற்றறிவினர்க்கு இயற்கை போலும். ஆயர் தலையனான நந்தகோன் மணவினை முடிக்க எல்லாவற்றையும் சித்தம் செய்தனன். சீவகன் ஆயர் குலப்பெண்ணைத் தான் ஏற்பது தகுதியல்லவென்பதையோர்ந்து அவளைப் பதுமுகனுக்காக ஏற்றான். பதுமுகனுக்கும் கோவிந்தைக்கும் விமரிசையாக மணம் நடந்தேறியது. இருவரும் சுகமே வாழ்ந்து வந்தனர்.

---


| | | | | |
|---|---|---|---|---|
| இரத்தினாம்பாள் அல்லது முத்தமாலை | ரூ. | 1 | 0 | 0 |
| சூரபத்மனின் வீரப்ரதாபம் | | 0 | 12 | 0 |
| மாணிக்கவாசகர்—ராமதாஸர் | | 0 | 8 | 0 |

ஸ்ரீ பாலசுப்ரமண்யம் கம்பெனி,
இராயப்பேட்டை, சென்னை.

## அத்தியாயம் 6.

### தத்தை திருமணம்.

ஸ்ரீதத்தன் என்னும் ஒரு வணிகன் தன்நகரமாகிய இராசமா புரத்தைவிட்டு, மரக்கலமூர்ந்து, பெரும் பொருளீட்ட ஒருதீவிற்குச் சென்றனன். அத்தீவினரசன் அநுமதியைப் பெற்றுத் தன் வியாபாரத்தையும் நடத்தினன். திரண்ட செல்வத்தைச் சம்பாதித்து மரக்கலத்தில் ஏற்றிக்கொண்டு தன்னூட்டிற்குப் புறப்பட்டு வந்தான். தரனென்னும் ஒரு வித்தியாதரனுடைய மாயையால், காளமேகங்களதிர்ந்து, மழையைத் தாரையாகப் பொழியப் பெரும்புயலும் உண்டாயின. மரக்கலம் அமிழ்வதுபோன்ற தோற்றமும் உண்டாயிற்று. ஸ்ரீதத்தன் பாய்மரத்தினுதவியால் அருகிருந்த சோலையொன்றை யடைந்து வருத்தமே உருவாக உட்கார்ந்திருந்தனன்.

வழிப்போக்கனைப்போல் வந்த தரனென்னும் அந்த வித்தியாதரன் ஒன்றுமறியாதவன்போல் அவ்வணிகனது வரலாற்றைக்கேட்டுத் தெரிந்துகொண்டு, புன்னகை பூத்த வண்ணமாய், "நண்ப! நீ மனங்கவல வேண்டாம். அழிந்த உனது செல்வத்தையும் அதிலிருந்த மனிதர்களையும் திரும்பவும் நினக்குத் தரும் ஆற்றலுள்ளேன். நீ எம்பதியை யடைக" என, அவனும் நேர்ந்தனன். இருவரும் வித்தியாதர நகர்க்கிறைவனை கலுழவேகன் அரண்மனையை யடைந்தனர். அவ்வரசன் ஆர்வத்தோடு அவனை வரவேற்று, முகமன் கூறி, க்ஷேமத்தையும் விசாரித்தனன். அவனை அந்தப்

புரத்திற்கு அழைத்துக்கொண்டு சென்று தன் மனைவிக்கும் அறிமுகம் செய்வித்தனன். பின் தன்மகளாகிய காந்தர்வதத்தையைச் சுட்டிக்காட்டி "தத்த! இவள் என்னருந் தவப்பேற்றால் உதித்தவள்.—

யாற்றறல் அன்ன கூந்தல் யாற்றுச்
சுழியெனக் கிடந்த குழிநவில் கொப்பூழ்
வில்லெனக் கிடந்த புருவம் வில்லின்
அம்பெனக் கிடந்த செங்கடை மழைக்கண்.
பிறையெனச் சுடரும் சிறுநுதல் பிறையின்
நிறையெனத் தோன்றும் கறையில்'வாண்முகம்
கிளியென மிழற்றும் கிளவி கிளியின்
ஒளிபெறுவாயி னன்ன வொள்ளுகிர்
வேயெனத் திரண்ட மென்றோள் வேயின்
விளங்கு முத்தன்ன துளங்கொளி முறுவல்
காந்தண் முகிழன்ன மெல்விரல் காந்தட்
பூந்துடுப் பன்ன புனைவளை முன்கை"

இத்தகைய அவயவங்களுடைய இப்பேரெழிலாள் வீணை வித்தையில் இணையற்றவள். இவள் பிறந்தபோது சோதிடர்கள் இவளுக்குக் கணவன் இராசமாபுரத்தே உள்ளானென்று கூறினர். நீ பெருநிதியம் திரட்டிக் கொண்டு உன்னூடுபோதலை யுணர்ந்து, தரன் என்பவனை அனுப்பி உன்னைஇங்கு தருவித்தேன். இவளை உன்னூட்டிற்கு அழைத்துச்சென்று, இசைப்போரில் இவளை வென்றவனுக்கு இவளை மணமியற்றிக் கொடுத்திடுக என்று கூறிப்பல பொருள்களையும், ஆயிரம் யாழ்களையும் பல சேடியர்களையும் கூட்டி யனுப்பினன். தரனும் தத்தனுடைய கப்பலைக் கொண்டுவந்து சேர்த்தனன். அடங்கா மகிழ்ச்சிகொண்ட தத்தன் எல்லாரோடும் இராசமாபுரத்தை யடைந்தான்.

ஸ்ரீ தத்தன் காந்தர்வதத்தைக்குச் சுயம்வர மேற் படுத்தப் பல ஏற்பாடுகளையும் செய்தான். காவலனை கட்டியங்காரனைக் கண்டுதான் செய்யவிருக்கும் காரியத்தைத் தெரிவித்தான். அவனும் அவ்வீணைப்போர் தன் முன்னிலையில் நடக்கலாமென உணர்த்தினன். உடனே ஸ்ரீதத்தன் மண்டபமொன்றையமைத்து வீணைக்கொடியைநாட்டினன். வள்ளுவ முதுமகனைவிளித்து, "ப்ரம்ம க்ஷத்திரிய வைசிய வருணத்தார்களில் யாவரேனும் தத்தையை இசையில் வென்று கைக்கொள்ளலாம்." எனப் பறையறையச் சொல்ல அவனும், பெரும்பறையை யானையின் மேலேற்றி, "நங்கோ! வாழ்க! மாரிவளம் பெருகுக!" என்று கூறிப் பின், "இசையில் வல்லீர்! தத்தை யென்னுமோர் விச்சியாதர மங்கையை இசையில் வெல்லுங்கோள்! காந்தண் மலரையொத்த அவள் கையைக் கொள்ளுங்கோள்! அப்படி செய்யாதொழிவீராயின், யாழை யொழித்துப் போடுமின். இசையைப் பயிலன்மின்" என்று கூறி வந்தனன்.

நன்னாளொன்றில் வீணைப்போர் ஆரம்பமாயிற்று. அவள் கண்டப்பாடலையும், வீணையிற்பாடும் பாடலினையும் கேட்டு, ஆண்டிருந்தோ ரெல்லோரும் பரவசமெய்தினர். அவளை வெல்வது அரிதென் றெண்ணினர். கின்னர மிதுனங்களென்னும் புட்கள் மயங்கிச் சோர்ந்தன. இளைஞர் யாழைக் கையிற்கொண்டு, இன்னரம்புகளைத் தடவவே அக்கின்னர மிதுனங்கள் அவ்வொலியைப் பொறாது, வெறுத்துப், பறந்தோடின. இதனால் அவர்கள் தோற்றவர்களானார்கள்.

இவ்வாறு காந்தர்வதத்தை தன்னை வெல்வாரைக் காணாமையால் ஆறு தினங்கள் வரையில் அம்மண்ட

பத்தே காத்திருந்தனள். கட்டியங்காரன் இராஜகுமாரர்களைப் பழித்துரைக்க அவர்கள் அவமானம் மிக்கவர்களானார்கள்.

எல்லோரும் தோற்றதைக் கேள்விப்பட்ட ஜீவகன் தான் சென்று தத்தையை வெல்ல வேண்டுமென்று கருதினான். தன் கருத்தைக் கந்துக்கடனுக்கறிவித்து, அவன் அநுமதியையும் பெற்று, நால்வகைப் படையுடன் சபா மண்டபத்தை யடைந்தனன். பற்பல காரணங்களினால் சீவகன்மேற் பொறாமை கொண்டிருந்த கட்டியங்காரன், சீவகனது பெருமையினையும். எழிலையும், ஒருவராலும் வெல்லக்கூடாத தத்தையைத் தான் வெல்ல எண்ணங்கொண்ட தைரியத்தையுங்கண்டு வயிறெரிந்தான்.

சீவகன் மணிமண்டபத்துள் புகுந்தனன். அவனெழிலைக் கண்ட தத்தை பெரிதும் வியப்படைந்து மதி மயங்கினாள். நல்ல வீணை ஒன்றினைத் தவிர்த்து, மற்றவைகளை அவன் கைக்கொடுக்க அவன் அவைகளிலிருந்த குற்றங்களை வெளிப்படுத்தினான். பின் நல்லியாழொன்றைக் கொடுக்க அதிலும் குற்றம் கண்டுபிடித்துத் தத்தையையும் பிரமிக்கச்செய்தான். தன் தோழனால் கொண்டுவரப்பட்ட நல்லதோர் வீணையையெடுத்து, நன்னரம்பைத் தடவிப்பாட கின்னர மிதுனங்கள் சோர்ந்தன, பின் மிடற்றினால் பாடினான். அவன் இசைப்பயிற்சியைக் கண்ட தத்தை அவனை வெல்வதரிதென்று எண்ணினாள். இவ்வெண்ணமே அவளுக்கு அதைர்யத்தைக் கொடுத்தது. அவள் பாட ஆரம்பித்ததும் அவள் குரலில் நடுக்கம் உண்டாயிற்று.

உடனே அப்பறவைகள் எழுந்து ஓடிப்போயின. அவள் ஜீவகனுக்குத் தோற்றவளானாள். உடனே அவள் பொன்மாலையைக் கையிற்கொண்டு சீவகன் கழுத்தி லிட்டு அவனை வணங்கி நின்றாள். சேடியர்கள் அவளைத் திரையிட்டு மறைத்தனர். சீவகன் அவளை வென்ற தற்காக எல்லோரும் அவனைப் புகழ்ந்தனர்.

ஜீவகனது கீர்த்தியோடு கட்டியங்காரனது பொறா மையும் பெருகிக்கொண்டே வந்தது. மன்னர்களுக் கும் சீவகனுக்கும் போரை மூட்டிவிட்டு, அவனைத் தொலைத்துவிடலாமென்று அவன் அங்கிருந்த மன் னர்களைப் பரிகசித்துரைத்தான். சிங்கங்கொல்லவிருக் கும் மானொன்றை நரியொன்று கொண்டதுபோல் செட்டி மகனாகிய சீவகன் தத்தையைக் கொண்டா னென்று இழித்துரைத்தான். இவ்வார்த்தைகளே அம் மன்னர்களைப் போருக்கெழுப்பப் போதுமானவைகளா யிருந்தன. இருதரத்தார் படைகளும் அணிவகுத்து நிற்கப் பெரும்போர் மூண்டது. சீவகன் வில்லினின்றும் புறப்பட்ட வெங்கூர்வாளிகளைத் தத்தையின் கண்க ளென ஏற்றார்கள். ஒரு முகூர்த்தத்திற்குள் எல்லா வேந்தர்களையும் முறியடித்து வெற்றிமாலையைச் சூடிய சீவகன் தன்மாளிகையை யடைந்தான்.

நன் முகூர்த்தத்தில் தத்தைக்கும் சீவகனுக்கும் மணவினை நடந்தது. எல்லோரும் சுகமே புசித்து சந்தோ ஷமாக விருக்கையில் கலுழவேகனிட மிருந்து சீவகனு க்குக் கடிதம் வந்தது. சீவகன் அதைப் பெற்று மகிழ்ச் சியடைந்து தன் மாமனாரை வணங்கினான்.

T. S. Narayana Rao,
Mylapore, Madras.

## ஆலயந் தொழுவது சாலவும் நன்று.

இது ஔவையார் அருளிய போதனை. இந்த உபதேசத்தை நாம் மறப்பது கூடாது. இன்னும் பல பெரியவர்களும் கோவிலுக்குச் சென்று ஈசனை வழிபடுதலைக் கடமைகளில் ஒன்றாகக் கொள்ளவேண்டுமென்று கட்டளையிட்டிருக்கிறார்கள். உலகநீதி என்னும் சிறுநூலில் கோவிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம் என்று கட்டளை பிறந்திருக்கிறது.

ஆக்கை யாற் பயனென் அரன்கோயில் வலம் வந்து [னென்
பூக்கையா லட்டிப் போற்றியென்னாதவிவ்—வாக்கை யாற்பய
கால்களாற் பயனென் கறைக்கண்ட னுறை கோவில்
கோலக் கோபுரக் கோகரணஞ்சூழாக்—கால்களாற் பயனென்

(திருநாவுக்கரசு சுவாமிகள்)

மூர்த்தி தலந்தீர்த்தம் முறையாற் றொடங்கினர்க்கோர்
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே

என்று தாயுமானவர் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

கண்ணுதலாலய நோக்கும் கண்களே கண்கள்
கறைக்கண்டன் கோவில் புகும் கால்களே கால்கள்

என்று பிரமோத்தரகாண்டமென்னும் சிறந்த நூல் கூறுகிறது.

"திருக்கோவிலுள்ளிருக்கும் திருமேனி தன்னைச்
சிவனெனவே கண்டார்க்குச் சிவனுறைவனங்கே"

என்று சிவஞான சித்தியார் என்னும் நூல் கூறுகின்றது.